**கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திடம் (ஈஎஸ்டீபி) - மாகாண மட்டம் - 2014**

---

கல்வித் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (ஈஎஸ்டிபீ) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 3008 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க சாதாரண செயற்பாடு மற்றும் 3009 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க விசேட செயற்பாடுகள் கடன் உடன்படிக்கைகளின் iv ஆம் உறுப்புரைகளின் 4.04 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. கடன் உடன்படிக்கைகளின்படி, நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் மாகாண ரீதியில் கல்வி அமைச்சு மற்றும் அனைத்து மாகாண சபைகளாலும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த அறிக்கை அனைத்து மாகாண சபைகளாலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீதான கருத்துரைகளைக் கொண்டுள்ளது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

---

கடன் உடன்படிக்கையின்படி, நாட்டின் பொது கல்வித்துறை எதிர்நோக்கும் சவால்களை உரைக்கும் கல்வித்துறை அபிவிருத்தி திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் 2013 – 2017 போன்றவற்றை அமுலாக்குவதற்கு நிதி ஆதரவை வழங்குவதற்கும் செயற்திட்டம் அமுலாக்கப்படுகிறது. செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர் கல்வி அமைச்சாகும். முதலாம் மற்றும் இரண்டாம் நிலை பாடசாலைகளின் ஆண் மற்றும் பெண் பட்டதாரிகளின் தொழில்வாய்ப்பினை அதிகரிக்கும் நவீன இரண்டாம் நிலைக் கல்வி முறைமையொன்றினை உருவாக்குவதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ஐ.அ.டொலர்கள் 200 மில்லியன் ஆகும். நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் 2013 ஆகஸ்ட் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2018 ஆகஸ்ட் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலபடுத்தப்பட்டுள்ளது.

**1.3 ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட ஆண்டு நிதி அறிக்கைகளுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

கல்வி அமைச்சு மற்றும் அனைத்து ஒன்பது மாகாண சபைகளினதும் ஒதுக்கீட்டு கணக்குகளை உள்ளடக்கிய இந்த ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கைகளை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட நிதியிடல் அறிக்கைகள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட நிதியிடல்

அறிக்கைகள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட நிதி அறிக்கைகளிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட நிதி அறிக்கைகளிலுள்ள பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட நிதி அறிக்கைகளின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட நிதியிடல் அறிக்கைகளில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன கல்வித்துறை நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட நிதி அறிக்கைகளானவை நிதிப்பிரமாணம் (எவ்ஆர்) 150 மற்றும் பொது திறைசேரியின் 2014 திசெம்பர் 01 இன் 239/2014 ஆம் இலக்க அரச கணக்கீட்டு சுற்றறிக்கை ஆகியவற்றுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்பதும், மற்றும்

(ஏ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஒன்பது மாகாண சபைகளின் 2014 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 2014 திசெம்பர் 01 இன் 239/2014 ஆம் இலக்க தேசிய கணக்கீட்டு சுற்றறிக்கை என்பவற்றிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தது. மேற்குறித்த ஒதுக்கீட்டுக் கணக்குகள் திறைசேரியின் கணனிப் பிரதி, வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் புத்தகங்கள் மற்றும் ஒன்பது மாகாண சபைகளால் பேணப்பட்ட பதிவேடுகள் மற்றும் ஏடுகள் என்பவற்றுடன் இணங்கியிருந்தது. கடன் பெறுவனவுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் 2014 ஆம் ஆண்டிற்கான ஒன்பது மாகாண சபைகளினதும் ஒதுக்கீட்டுக் கணக்குகளில் முறையாக பதிவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2014 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் வழங்குவதற்கென உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டின் போது | | 2014 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| நன்கொடையளிக்கும் முகவர் | 200 | 26,000 | 3,094 | 23.8 | 3,091 | 23.8 | 3,091 |
| மொத்தம் | **200** | **26,000** | **3,094** | **23.8** | **3,091** | **23.8** | **3,091** |

## 3.2 பௌதீக செயன்முன்னேற்றம்

நிதி உடன்படிக்கையின் பட்டியல் 03 இற்கான இணைப்பு 01 இன் பிரகாரம், செயற்திட்டமானது 33 வழங்கல் இணைப்பு குறிகாட்டிகளின் கீழ் 09 வழங்கல் இணைப்பு விளைவுகளை அடையும் பொருட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கின்றது. மேலும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சகல நிதி மூலங்களிலிருந்து கல்வித்துறைக்காக மாகாண சபைகளினால் ஏற்படுத்தப்பட்ட ரூபா 94.237 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான மொத்த செலவினத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட ஆண்டு நிதியிடல் அறிக்கைகள் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மாகாணக் கல்வித் திணைக்களம் மற்றும் மாகாண கல்வி அமைச்சின் செயற்பாடுகள் தொடர்பாக 2014 ஆம் ஆண்டிற்கான மாகாண சபைகளின் ஒதுக்கீட்டுக் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய கணக்காய்வு அவதானிப்புக்களில் பின்வருமாறு மீள தரப்படுகின்றன.

(i). கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், வடமத்திய மாகாணத்திற்கென மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,910,000 கூட்டுத்தொகையான மொத்த நிதி ஏற்பாட்டில் மீளாய்வாண்டினுள் 25 சதவீதம் முதல் 69 சதவீதம் வரை சேகரிக்கப்பட்டமை அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ii). 1000 இரண்டாம் நிலைப் பாடசாலைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடங்களை அபிவிருத்தி செய்வதற்கும் நிர்மாணிப்பதற்கும் வட மத்திய மாகாணத்தின் 83 இரண்டாம் நிலை பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், 2015 ஆகஸ்ட் 31 வரையிலும் 10 ஆய்வுடங்களின் நடவடிக்கைகள் மாத்திரமே மாணவர்களின் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டிருந்தன. தேவையான உபகரணங்கள் இன்மை மற்றும் தேவையான மின்சார இணைப்பின்மை போன்ற காரணங்களால் ஏனைய பாடசாலைகளின் தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் செயற்படாதிருந்தன.

(iii). திரட்டப்பட்ட தகவல்களின் பிரகாரம், ஆரம்பத்தில் ஊட்டி (Feeder) பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த வட மத்திய மாகாணத்திலுள்ள 25 பாடசாலைகள் பின்னர் நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து விலகியிருந்தன. இதன் விளைவாக, குறித்த பாடசாலைகளில் மீளாய்வாண்டிற்கான தரம் 6 இற்கு அனுமதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை மீளாய்வாண்டில் குறைவடைந்திருந்தது.

(iv). மாகாண மட்டத்திலுள்ள பாடசாலைகளிற்கான ஆசிரியர்களின் ஒதுக்கீடு திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சேகரிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், வடக்கு, வட மத்திய, வட மேற்கு, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களிலுள்ள கிராமப் புற பாடசாலைகளில் பிரதான பாடங்களிற்கான ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவிய அதே சமயம் குறித்த மாகாணங்களிலுள்ள நகரப்புற பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர்கள் இருந்தனர். மேலும், ஆசிரியர்களின் வருடாந்த இடமாற்றங்கள் முறையாக அமுலாக்கப்படாமையால் சப்ரகமுவ, வட மத்திய மற்றும் வட மேற்கு மாகாணங்களிலுள்ள அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் 10 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக ஒரே பாடசாலையில் இருந்தனர். இதற்கு மேலதிகமாக, கல்வி அமைச்சியால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் சப்ரகமுவ மற்றும் வட மேற்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளால் முறையாக அமுல்படுத்தப்பட்டிருக்காததுடன், குறித்த பாடசாலைகளின் ஆசிரியர்கள் குறைப்பயன்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டிருந்தமை விரிவான கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(v). சேகரிக்கப்பட்ட தகவல்களின்படி, பல மாகணங்களிலுள்ள கிராமப்புறப் பாடசாலைகளில் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைப் பாடசாலைகளில் மாணவர் தொகை குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. தென் மாகாணம் மற்றும் மத்திய மாகாணத்திலுள்ள முறையே 823 மற்றும் 1,211 இரண்டாம் நிலை பாடசாலைகள் 500 இற்கும் குறைவான மாணவர்களை கொண்டிருந்த அதே சமயம் மத்திய மாகாணத்தில் 564 ஆரம்ப நிலைப் பாடசாலைகள் 100 இற்கும் குறைவான மாணவர் தொகையைக் கொண்டிருந்தன. சப்ரகமுவ மாகாணத்திலுள்ள 244 பாடசாலைகள் 50 இற்கும் குறைவான மாணவர்களை கொண்டிருந்தன. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வட மேல் மாகாணத்திலுள்ள 126 பாடசாலைகளும் வடக்கு மாகாணத்திலுள்ள 88 பாடசாலைகளும் மூடப்பட்ட நிலையிலிருந்தன என்று அறிக்கையிடப்பட்டிருந்தது

(vi). வடக்கு மாகாணத்தில் 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் மாணவர் சித்தியடையும் விகிதம் 21 சதவீதமாக இருந்த அதே சமயம் ஏனைய மாகாணங்களில் மாணவர் சித்தியடையும் வீதம் 11 சதவீதம் தொடக்கம் 17 சதவீதம் வரை வீச்செல்லை கொண்டதாக இருந்தன. ஊவா, வடக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதரணதர) பரீட்சையில் சகல பாடங்களிலும் தோல்வியடையும் வீதம் 4 சதவீதம் தொடக்கம் 6 சதவீதம் வரையான வீச்சில் இருந்தன. மேலும், வட மத்திய, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சையில் சகல பாடங்களிலும் தோல்வியடையும் வீதம் 8

சதவீதம் தொடக்கம் 11 சதவீதம் வரையான வீச்செல்லையில் உயர்வானதாக இருந்தது.

(vii). சப்பிரகமுவ, மேல் மற்றும் தென் மாகாணங்களில் உள்ள பாடசாலைகளின் மேற்கொள்ளப்பட்ட விரிவான கணக்காய்வில் ஆதாரமான ஆவணங்களின்றி அல்லது முறையான அதிகாரமின்றி மற்றும் முறையாக தயாரிக்கப்பட்ட உறுதிச்சீட்டுக்கள் இன்றி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமை போன்ற நலிவுகள் மாகாண மட்டப் பாடசாலைகளிலுள்ள நிதிக் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்டன. மேலும், சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களிலுள்ள 343 பாடசாலைகளால் வங்கிக் கணக்குகளுக்கான காலாண்டு கணக்கறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மேல், சப்பிரகமுவ, வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலுள்ள மாகாண கல்வித் திணைக்களங்களில் மேற்கொள்ளப்பட்ட விரிவான கணக்காய்வில் மனிதவள முகாமைத்துவம் தொடர்பான மாகாண பாடசாலைகளின் பொது நிர்வாக நடவடிக்கைகள், ஆசிரியர்களின் விடுமுறை மற்றும் தர உள்ளீடுகளிற்கான ஏடுகளை முறையாக பேணுதல், மாணவர்களின் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசாங்க மானியங்களின் பங்கீடு மற்றும் ஆசிரியர்களின் இடர் நிவாரணக் கடன்களை மீள அறவிடாமை, செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டம் அமுல்படுத்தப்படாமை ஆகியன அவதானிக்கப்பட்டன. மேலும், வடக்கு, சப்ரகமுவ மற்றும் வட மத்திய மாகாண அமைச்சுக்களால் இழப்புப் பதிவேடு மற்றும் வருடாந்த கொள்வனவு திட்டம் ஆகியன பேணப்பட்டிருக்கவில்லை.

(viii). வடமேல், வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் மாகாண கல்வித் திணைக்களங்களினால் 2014 ஆம் ஆண்டில் சொத்துக்களின் பௌதீகரீதியான உள்ள தன்மையை உறுதிப்படுத்துவதற்கான ஆண்டு கணிப்புச் சபைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.